2025 – ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 289 / 2023*

*2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 2, செந்தில்முருகன் |
| தந்தையார் பெயர் | : | ராஜகோபால் |
| ஊர் | : | குரும்பலூர் பாளையம் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | மருத்துவ பதிவேடு பராமரிப்பு அலுவலர் |
| வயது | : | 35 |

<u>தேதி: **29.04.2025.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது பெரம்பலூர் S P T மருத்துவமனையில் மருத்துவ பதிவேடு பராமரிப்பு அலுவலராக பணிபுரிந்து வருகின்றேன். மருத்துவர் பிரபுவுடன் பணி செய்த வகையில் அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையமாகும். எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **ம.சா.ஆ.8,** எங்கள் மருத்துவமனையில் 05.05.2023–ம் தேதி சாரதா என்பவருக்கு எங்கள் மருத்துவமனையில் பதியப்பட்ட விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.9,** சாரதா என்பவருக்கு எங்கள் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான மருத்துவ குறிப்புகள் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.10,** ஆக தாக்கல் செய்கின்றேன். மருத்துவ விடுவிப்பு சான்றான ம.சா.ஆ.2 ஆவணம் எங்கள் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 மருத்துவ பில்கள் அனைத்தும் எங்கள் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 மருத்துவ பில்களின் முதல் வரிசையில் கண்ட Final invoice

cum Receipts என்பதில் கண்ட தொகையான ரூ.43,000/—க்கான ரசீது எங்கள் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை (2—ம் எதிர்மனுதாரர் தரப்பில்):—</u>**

எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குரிய அசல் மருத்துவ பில்களை அந்த நோயாளி வசமே திருப்பி கொடுத்து விடுவோம் என்றால் சரிதான். அவ்வாறு அசல் பில்களை கொடுத்த பிறகு எடுக்கப்படும் ஒவ்வொரு பில்களுமே நகல் பில்கள் தான் என்றால் சரிதான். அவ்வாறு எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட ம.சா.ஆ.3—ல் குறிப்பிடப்பட்டுள்ள முதல் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.43,000/—க்குண்டான பில்கள் எங்கள் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட நகல் பில்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 பில்லின் பின் பக்கம் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தாகும். அதில் உள்ள முத்திரை எங்கள் மருத்துவமனையில் உள்ள முத்திரையாகும். மேற்படி பில் எங்களுடைய மருத்துவமனையில் காப்பீட்டின் மூலம் கிளைம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே அதன் விபரம் எங்களுக்கு தெரியவரும் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் அசல் பில்களை வாங்கிக்கொண்டு கிளைம் செய்யப்பட்டிருந்தால் அந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அசல் பில்களை பெற்றுக்கொண்டு வெளியில் சென்று தனிப்பட்ட முறையில் காப்பீட்டின் மூலம் கிளைம் கோர முடியுமா என்றால் முடியும். அசல் பில்களை பெற்றுக்கொண்டு மனுதாரர் வெளியில் சென்று தனிப்பட்ட முறையில் காப்பீட்டின் மூலம் கிளைம் பெற்றாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் மருத்துவ பில்கள் தொலைந்து விட்டதாகவோ அல்லது வேண்டும் என்பதற்காகவோ எழுத்து மூலமாக எங்கள் மருத்துவமனைக்கு கடிதம் எழுதிக்கொடுத்து பெற்றுக்கொண்டாரா என்றால் கடிதம் எழுதிக்கொடுக்கவில்லை, ஆனால் வாய் மொழியாக தெரிவித்தார். எங்கள் மருத்துவமனையில் மருத்துவ பில்களை வேண்டும் நபருக்கு நானே கையெழுத்து செய்து மருத்துவரின் பரிந்துரை இன்றி கொடுத்து விடுவோனா

என்றால் இல்லை, மருத்துவரின் பரிந்துரையின் பேரில் தான் கொடுப்பேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் முதல் வரிசையில் கண்ட Final invoice cum Receipts பில் மட்டும் நகல் பில்கள் என்பதால் மனுதாரருக்கு இரட்டிப்பு தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:–இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**